# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2024 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்

[*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


*2024, பெப்புருவரி மாதம் 02 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்**

*[2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஓ. 7/2023*

**(107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நொத்தாரிசு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுக் கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *107 ஆம் அத்தியாயத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) அத்தகைய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, பின்வரும் விபரங்கள் அடங்கிய, அத்தகைய நொத்தாரிசினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான வெளிப்படுத்துகையொன்று அத்தகைய பதிவாளருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அவரது பெயர் மற்றும் வதிவிடம் அல்லது வதிவிடங்கள்;

(ஆ) அவரது அலுவலகத்தின் அல்லது அவரது அலுவலகங்கள் ஒவ்வொன்றினதும் திட்டவட்டமான அமைவிடம்;

(இ) அவர் தொழில்புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நீதிமுறை வலயம்.";

(2) அதன் (1அ) என்னும் உட்பிரிவில் "எனப் பயன்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எனவும் 35 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவாளர் தலைமையதி பதியினால் விதிக்கப்பட்டுள்ள பணத்தொகை ஏதேனும் இருப்பின், அவ்வேதேனும் பணத்தொகை செலுத் தப்பட்டுள்ளது எனவும் பயன்படும்" என்னும் சொற் களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத் தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (5) ஆம் விதிக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"உறுதிகள் பிரிக்கப்படாத தாளின் மீது அல்லது காணிப் பதிவாளரினால் கையொப்பமிடப் பட்ட தாள்களின் மீது எழுதப்படுதல் வேண்டும்.

(5) அவர், பின்வருமாறு இருந்தா லொழிய ஒன்றுக்கு மேற்பட்ட முழுமை யான அல்லது பிரிக்கப்படாத காகிதத் தாளின் மீது அல்லது நீலத்தாளின் மீது எழுதப்படுகின்ற ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை மெய்யென உறுதிப்படுத்துதலோ அல்லது அத் தாட்சிப்படுத்துதலோ ஆகாது -

(அ) பயன்படுத்தப்பட்ட தாள்கள் அல்லது காகிதங்களுள் ஒவ் வொன்றும், நொத்தாரிசு எந்த மாவட்டத்தில் வசிக்கின்றாரோ அந்த மாவட்டத்துக்கான காணிப் பதிவாளரின் முன்னிலையில் முன்னரே சமர்ப்பிக்கப்பட்டு அத் தாள்கள் வேறு ஏதேனும் நோக் கத்துக்காக பயன்படுத்தப்படு வதனைத் தடுப்பதற்கென அத்த கைய பதிவாளரினால் குறியிடப் பட்டிருந்தாலொழிய அல்லது

கையொப்பமிடப்பட்டிருந்தா லொழிய அல்லது முதலெழுத்து ஒப்பமிடப்பட்டிருந்தாலொழிய; அல்லது

(ஆ) அதனை நிறைவேற்றுகின்ற திறத்தவர்களும் நொத்தாரிசும் ஒவ்வொரு தாளிலும் அல்லது எந்தத் துண்டில் உறுதியின் அல்லது சாதனத்தின் ஏதேனும் பாகம் எழுதப்படுகின்றதோ அந்தத் துண்டிலும் கையொப்ப மிட்டிருந்தாலொழிய; அத்துடன்

(இ) பக்கங்கள் இலக்கமிடப்பட்டி ருந்தாலொழிய.'';

(2) அதன் (7அ) என்னும் விதியில்,-

(அ) (அ) என்னும் பந்தியில், ''எந்தக் கைமாற்றம், நன்கொடை அல்லது பரிமாற்றம் தொடர்பான எந்த உறுதிக்கு அல்லது சாசனத்துக்கு எந்த முத்திரைத் தீர்வை செலுத்தப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த முத்திரைத்தீர்வை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒவ்வொரு உறுதி அல்லது சாதனம் தொடர்பிலும் செலுத்தப்படுவதற்கு தேவைப் படுத்தப்படுகின்ற ஏதேனும் முத்திரைத் தீர்வை'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வருவ தனை இடுவதன் மூலமும்:-

''(ஆ) முத்திரைகள் அல்லது அத்தகைய கொடுப்பனவுக்கான எண்பிப்பாக இயைபான வங்கியிலிருந்து பெறப்பட்ட

மூலப்பற்றுச்சீட்டு, உறுதியின் அல்லது சாதனத்தின் இணைப்பிரதிக்கு நொத்தாரிசினால் ஒட்டப்படுதல் வேண்டும்”;

(இ) (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(ஈ) உறுதியின் அல்லது சாதனத்தின் இணைப்பிரதிக்கு முத்திரைகள் ஒட்டப்படுகின்ற விடத்து, அத்தகைய முத்திரைகள் எந்த இணைப்பிரதிக்கு ஒட்டப்படுகின்றதோ அந்த இணைப் பிரதியின் உண்மைப் பிரதியொன்று, பதிவுக்காக மூலப்பிரதி சமர்ப்பிக் கப்படும்போது, மூலப்பிரதியுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.”; அத்துடன்

(ஈ) ஓரக்குறிப்புக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“உறுதிகள் அல்லது சாதனங்களை முத்திரையிடல்”;

(3) அதன் (9) ஆம் விதியில், “அத்துடன் பின்னைய விடயத்தில், அவர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அவர்” என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(4) அதன் (10) ஆம் விதியை நீக்கிவிடுவதன்மூலமும்;

(5) அதன் (15அ) என்னும் விதியில்,-

(அ) (ஆ) என்னும் பந்தியில், “கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சபையின் பணிப்பாளர்களின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “கூட்டி

ணைக்கப்பட்ட குழுவொன்றின் பணிப்பாளர்கள் சபையின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்;

(6) அதன் 17 ஆம் விதியில் -

(அ) (ஆ) என்னும் பந்தியில், (iii) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(iii) கைமாற்றல் உறுதியொன்றின் அல்லது நன்கொடை உறுதியொன்றின் அல்லது பரிமாற்றல் உறுதியின் அல்லது விருப் பாவணமொன்றின் விடயத்தில், அவர் சாட்சிகள் தவிர்ந்த கையொப்பமிடு நர்களின் கடவுச்சீட்டு அளவினதான புகைப்படங்களை அத்தகைய சாதனத் தின் நொத்தாரிசின் பிரதிக்கு ஒட்டுதல் வேண்டும்; அச்சாதனத்தில் நொத்தாரிசு அவரது இலச்சினையைப் பொறித்திருத்தல் வேண்டும் என்பது டன் நொத்தாரிசின் பிரதியுடன் இணைக்கப்பட்டதாக அத்தகைய கையொப்பமிடுநர்களின் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது சாரதி உரிமத்தின் பிரதிகளை வைத்தி ருத்தலும் வேண்டும்;";

(ஆ) அவ்விதியின் (இ) என்னும் பந்தியில், "முழுப் பெயரையும்" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "முதலெழுத்துக்களுடன் பெயரையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) அதன் (20) ஆம் விதியில், (எ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(எ) குறிப்பாக அத்தகைய உறுதியில் அல்லது சாதனத்தில் செய்யப்பட்ட அழித்தல்கள், மாற்றங்கள் மற்றும் இடைச்செருகல்களையும் அது மேற்கூறப்பட்டவாறு வாசித்துக் காட்டப்படுவதற்கு முன்னர் அவை செய்யப் பட்டனவாவென்பதையும் அதற்கான கையொப்பங்களில், அதன் தொடரிலக்கத்தில் மற்றும் அதற்கு ஒட்டப்பட்ட முத்திரையின் மீதான எழுத்தில் செய்யப்பட்ட அழித்தல்கள், மாற்றங்கள் மற்றும் இடைச்செருகல்கள் எவையேனும் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்";

(8) அதன் (26) ஆம் விதியில், அவ்விதியின் (அ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியில் "படிவம் ஊ இல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "படிவம் ஊ 1 இல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(9) அதன் (29) ஆம் விதியில், "படிவம் ஊ இல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "படிவம் ஊ 1 இல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(10) அதன் (30) ஆம் விதியில், "அவர் மூலப்பிரதிக்கு பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் அத்துடன் இணைப்பிரதிக்கும் அதன் நொத்தாரிசுப் பிரதிக்கும் அதன் உண்மைப் பிரதி களையும் இணைத்தல் வேண்டும்." என்னும் சொற்க ளுக்குப் பதிலாக "அவர் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் உண்மைப் பிரதியொன்றை அதன் மூலப்பிரதிக்கும், இணைப் பிரதிக்கும் மற்றும் நொத் தாரிசுப் பிரதிக்கும் இணைத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 38அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**4.** பின்வரும் புதிய பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் 38அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

"கொடுக்கல் வாங்கலின் உண்மையான தன்மையை நொத்தாரிசு விளக்குதல் வேண்டும்

38அ (1) (அ) திறத்தவர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கலின் உண்மையான சட்டத் தன்மையை நிச்சயிப்பதற்கு முயற்சித்தலும் உண்மையான கொடுக்கல் வாங்கலுக்காக உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுவதும் நொத்தாரிசு ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எவரேனும் நிறைவேற்றுநர் ஒவ்வொரு உறுதியிலும் அல்லது சாதனத்திலும் கையொப்பமிடுவதற்கு முன்னர் அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தின் உண்மையான தன்மையை குறிப்பாகவும் வெளிப்படையாகவும் விளங்கப்படுத்துவது நொத்தாரிசு ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) அவர், உண்மையில் ஒரு ஈடாக, நிபந்தனையுடனான கைமாற்றமொன்றாக அல்லது வேறு ஏதேனும் ஒத்த சாதனம் அல்லது உறுதியாக உள்ள கொடுக்கல்வாங்கல் ஒன்று தொடர்பில் ஏதேனும் கைமாற்றல் உறுதியை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் மெய்யென உறுதிப்படுத்துதலோ அல்லது அத்தாட்சிப்படுத்துதலோ ஆகாது.

(3) மேலேயுள்ள (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறி உறுதி அல்லது சாதனமொன்றை அறிந்து கொண்டும் வேண்டுமென்றும் நிறைவேற்றுகின்ற எவரேனும் நொத்தாரிசு தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, “உறுதிமுடிப்பவர்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துகான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் ஊ என்னும் படிவத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“படிவம் ஊ [பிரிவு 31(24)]

உறுதிகள் பற்றிய
இடாப்பு

| உறுதி இல. | அத்தாட்சிப் படுத்துகைத் திகதி | சாதனத்தின் தன்மை | திறத்தவர்களின் பெயர் | | பதிவு மாவட்டம் | உறுதியினால் சம்பந்தப்பட்ட காணியின் பெயர் ; ஒன்றுக்கு மேற்பட்ட காணிகளாயின் முதலாவது காணி மட்டும் | பிரதி பயன் | இணைப் பிரதியின் மீதான முத்திரை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளிப்பவர் | அளிப்புப் பெறுநர் | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

.”;

(2) அதன் படிவம் ஊ இனை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

“படிவம் ஊ 1 [பிரிவு 31(26)]

உறுதிகளின் மாதாந்த நிரல்

................ ஆம் ஆண்டு ................................. மாதத்தின் போது அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகளின் நிரல்

நொத்தாரிசின் பெயர்:
நொத்தாரிசின் தே.அ.அ.இல.:
இல.:

| இல. | உறுதி இல. | அத்தாட்சிப்படுத்துகைத் திகதி | சாதனத்தின் பெயர் | அளிப்பவர் | | அளிப்புப்பெறுநர் | | பதிவு செய்யப்பட்ட மாவட்டம் | காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | காணியின் பெயர் | காணி அமைந்துள்ள உள்ளூரதிகார சபை | பிரதிபயன் | முத்திரைத் தீர்வை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயர் மற்றும் முகவரி | தே. அ. அ. இல. | பெயர் மற்றும் முகவரி | தே. அ. அ. இல. | | | | | | மத்திய அரசாங்கம் | மாகாண சபை |
| | | | | | | | | | | | | | | |

.”.

**7.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் சட்டமுறையாக நிறைவேற்றப்பட்டதும் (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பதிவு முடிவுறாதுள்ளதுமான ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தைப் பாதித்தலாகாது.

ஐயத்தைத் தவிர்த்தல்

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*